***படிவம் 1*** : *இலக்கணம் (எழுத்தியல்)*

**சுட்டெழுத்து**

- ✓ ஒரு சொல்லில் முதலெழுத்தாக இருந்து ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவது சுட்டெழுத்தாகும்.

✓ சுட்டெழுத்துகள் **மூன்று (அ, இ, உ)**

| | | | |
|---|---|---|---|
| *(i)* | அ - சேய்மைச்சுட்டு (தொலைவு) | : | அங்கு, அவன், அது |
| *(ii)* | இ - அண்மைச்சுட்டு (அருகில்) | : | இங்கு, இவன், இது |
| *(i)* | உ - இடையே உள்ள பொருளைக் குறிக்கும் | : | உங்கு, உவன் |

(குறிப்பு : அ, இ ஆகிய இரண்டு சுட்டுகள் மட்டுமே இன்றைய வழக்கில் உள்ளன.
'உ' எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை)

- ✓ சுட்டெழுத்து **இரண்டு வகைப்படும்**

*(i)* ***அகச்சுட்டு***

- ஒரு சொல்லின் உள்ளே சுட்டெழுத்து அடங்கி வருமாயின் அது அகச்சுட்டாகும்.
- இவ்வகைச் சொல்லில் அடங்கியுள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் அது தனிச் சொல்லாக இயங்காது.

| | | |
|---|---|---|
| எ.கா : | அவன் | = அ + அன் |
| | இவள் | = இ + அள் |
| | உவர் | = உ + அர் |

*(ii)* ***புறச்சுட்டு***

- ஒரு சொல்லுக்குப் புறத்தே சுட்டெழுத்து நின்று இயங்குவதால் அது புறச்சுட்டு என அழைக்கப்படும்.
- இவ்வகைச் சொல்லில் உள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் அது தனிச் சொல்லாக இயங்கும்.

| | | |
|---|---|---|
| எ.கா : | அக்குதிரை | = அ + குதிரை |
| | இப்புத்தகம் | = இ + புத்தகம் |
| | உப்பையன் | = உ + பையன் |

**அண்மைச்சுட்டு**

தன் அருகில் உள்ள பொருளைச் சுட்டும் எழுத்து அண்மைச்சுட்டு.
**எ.கா.: இவர், இவள், இவன், இது, இவை**

**சேய்மைச்சுட்டு**

தனக்குத் தொலைவில் உள்ள பொருளைச் சுட்டும் எழுத்து சேய்மைச் சுட்டு.
**எ.கா.: அவர், அவள், அது, அவை**

***ஆசிரியை விக்னேஸ்வரி முருகையா***
***ஸ்ரீ அலாம் 2 இடைநிலைப்பள்ளி, மாசாய் ஜொகூர்***

LIVEWORKSHEETS

பயிற்சி **(சுட்டெழுத்து)**

1. **சுட்டெழுத்து** எத்தனை **வகைப்படும்?**

| | | | |
|---|---|---|---|
| A | **3** | C | 1 |
| B | **2** | D | 4 |

2. கீழ்க்காணும் வாக்கியத்தில் **புறச்சுட்டை** அடையாளம் காண்க.

<u>அவ்வழியே</u> <u>சென்ற</u> <u>இனியா</u> இலக்கியாவைக் <u>கண்டதும்</u> அகமகிழ்ந்தாள்.
A B C D

3. கீழ்க்காண்பவை ____________________ ஆகும்.

அவன் அது இவர்கள் இவள்

| | | | |
|---|---|---|---|
| A | அகச்சுட்டு | C | புறச்சுட்டு |
| B | அகவினா | D | புறவினா |

4. **சுட்டெழுத்துகள்** கொண்ட வரிசையைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| A | அ, இ, எ | C | எ, ஏ, யா |
| B | அ, இ, உ | D | ஆ, யா, ஓ |

5. பின்வருவனவற்றுள் எது **புறச்சுட்டு அல்ல?**

| | | | |
|---|---|---|---|
| A | அக்குதிரை | C | இச்சிறுவன் |
| B | இவன் | D | உப்பக்கம் |

6. பின்வருவனவற்றுள் மிகச் சரியான அகச்சுட்டுகளைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| I | இவள் | III | உவள் |
| II | இக்கட்டடம் | IV | அப்பள்ளிக்கூடம் |

| | | | |
|---|---|---|---|
| A | I, II | C | I, III |
| B | II, II | D | II, IV |

**ஆசிரியை விக்னேஸ்வரி முருகையா**
**ஸ்ரீ அலாம் 2 இடைநிலைப்பள்ளி, மாசாய் ஜொகூர்**

LIVEWORKSHEETS

7. கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் புறச்சுட்டைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| *I* | இப்பையன் | *II* | எப்புத்தகம் |
| *III* | உவள் | *IV* | அத்தலைவன் |

| | | | |
|---|---|---|---|
| *A* | *I, II* | *C* | *II, III* |
| *B* | *I, IV* | *D* | *II, IV* |

8. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்து அல்லாத சொல்லைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| *A* | அது | *C* | ஏது |
| *B* | இவை | *D* | உவன் |

9. பின்வருவனவற்றுள் மிகச் சரியான அகச்சுட்டுகளைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| *I* | அவை | *III* | உவன் |
| *II* | இப்படம் | *IV* | எவன் |

| | | | |
|---|---|---|---|
| *A* | *I, II* | *C* | *I, IV* |
| *B* | *I, III* | *D* | *II, IV* |

10. பின்வருவனவற்றுள் எவை சுட்டெழுத்துகளைக் கொண்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| *I* | அத்தலைவி | *III* | எவை |
| *II* | யாது | *IV* | இவன் |

| | | | |
|---|---|---|---|
| *A* | *I, II* | *C* | *I, IV* |
| *B* | *II, III* | *D* | *III, IV* |

***ஆசிரியை விக்னேஸ்வரி முருகையா***
***ஸ்ரீ அலாம் 2 இடைநிலைப்பள்ளி, மாசாய் ஜொகூர்***

LIVEWORKSHEETS